**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - பெரியார் திரைப்படம் - பள்ளி மாணவ மாணவியர் சலுகைக் கட்டணத்தில் பார்க்க ஸ்ரீ அனுமதி - ஆணை வெளியிடப்படுகிறது.

------------------------------------------------------------------------------------------

**பள்ளிக் கல்வித் துறை**

அரசாணை (1டி) எண்.194
நாள் 11.06.2007

படிக்கப்பட்டது

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண். 19205/ எம் 2/07 நாள் 5.6.07.

**ஆணைீ**

பார்வையில் காணும் கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர், தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் ''பெரியார்'' திரைப்படம் திரையிடப்பட்டு பொதுமக்களால் பார்க்கப்பட்டு வருகிறது என்றும் இப்படத்தில் தீண்டாமை ஒழிப்பு, கலப்புத் திருமணம், பெண்களுக்குச் சமஉரிமை, தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களில் நுழைவு, கதர் ஆடை அணிவது, மதுவிலக்கு, சாதிமதமற்ற சமுதாயம் அமைதல், மூட நம்பிக்கையை ஒழித்தல், விதவை திருமணம் போன்ற கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இக்கருத்துக்களின் வாயிலாக மாணவர்களிடையே ஒரு எழுச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை நிலவி வருவதாகவும் மாணவர்களுக்கு இப்படத்தினைப் பார்ப்பதன் மூலம் சுயசிந்தனையும், தன்னம்பிக்கையும், ஒளிமயமான எதிர்காலமும் அமையும் என நம்பப்படுகிறது என்றும், எனவே இப்படத்தை அனைத்து மாணவர்களும் பார்த்து பயனடைவது மிகமிக அவசியமான ஒன்று எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில் இப்படத்தினைப் பள்ளி மாணவர்கள் பயனடையும் வண்ணம் ஏற்பாடுகளைச் செய்வதும், பள்ளி மாணவர்களுக்கென சலுகைக் கட்டணத்தில் பார்க்க அனுமதிப்பதும் முக்கியமான ஒன்று என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து 50 விழுக்காடு அளவில் சலுகைக் கட்டணம் அளித்து பள்ளி மாணவர்கள் இப்படத்தினைப்

பார்க்கும் வண்ணம் செய்யலாம் என்றும் மாணவர்களை அந்தந்தப் பள்ளிக்கு அருகாமையிலுள்ள திரையரங்குகளுக்கு அழைத்துச் சென்று மீண்டும் பள்ளிக்குக் கொண்டு சேர்க்கும்வரை தலைமையாசிரியர்கள் பொறுப்பேற்று செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் எல்லா பள்ளி மாணவர்களும் இப்படத்தினைப் பார்த்து பயனடையும் வண்ணம் அரசாணை வெளியிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்காண் கோரிக்கையை அரசு நன்கு பரிசீலித்தபின் அவரது கருத்துருவை ஏற்று, பெரியார் திரைப்படத்தை 50 விழுக்காடு சலுகைக் கட்டணத்தில் பள்ளி மாண மாணவியர் பார்த்துப் பயனடையும் வகையில், மாணவ மாணவியரை அந்தந்தப் பள்ளிக்கு அருகாமையிலுள்ள திரையரங்குகளுக்கு அழைத்துச் சென்று மீண்டும் பள்ளிக்குக் கொண்டு சேர்க்கும்வரை தலைமையாசிரியர்கள் பொறுப்பேற்று செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனைத்து வகையான பள்ளி நிர்வாகங்களுக்கும் அறிவுரை வழங்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணை வழங்குகிறது.

4. பெரியார் படத்தைத் திரையரங்குகளில் 50 விழுக்காடு கட்டணச் சலுகைகளில் மாணவ மாணவியருக்குச் சிறப்பு காட்சிகளாகத் திரையிட தக்க நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாநகர காவல் துறை ஆணையரும், இதர மாவட்டத் ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ம.குற்றாலிங்கம்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
செயலர், செய்தித் துறை, சென்னை-9.
இயக்குநர், செய்தி (மற்றும்) மக்கள் தொடர்புத் துறை,சென்னை-9
சென்னை மாநகர காவல் துறை ஆணையர், சென்னை-8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை தவிர)
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்.**